உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
நாள் :03.12.2024
அ.சா.6– பஞ்சவர்ணம் W/o.குருசாமி
S.C. No.583/2023 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னுடைய மூத்தமகன் மனைவி இந்த வழக்கின் புகார்தாரர் நதியா என்றால் சரிதான். நான் படிக்கவில்லை. என்னுடைய வீட்டு முகவரி கோட்டநத்தம்பட்டி, அண்ணாநகர் என்றால் சரிதான். வழக்கு சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நதியா மாடியில் இருக்கிறார் நாங்கள் கீழே குடியிருக்கிறோம். எனக்கு சுருதிஸ்ரீ என்ற பேத்தி இருக்கிறார் என்றால் சரிதான். அந்த பெண் பள்ளியில் படித்து வருகிறார் என்றால் சரிதான். காலை சுமார் 7.30 -8.00 மணிக்குள்ளாக என் பேத்தி பள்ளிக்கு கிளம்பிவிடுவார் என்றால் சரியல்ல. 8.30 மணிக்கு ஸ்கூல் வேன் வரும். என் பேத்தியை காலையில் கிளப்பி பராமரித்து, பள்ளிக்கு அனுப்புவது அவசர கதியில்நதியா செய்வார் என்றால் 8.00 மணிக்கெல்லம் கிளப்பி விடுவார். அதற்கு முன்பாக சமையல் வேலைகளையெல்லாம் செய்து குழந்தையை பள்ளிக்கு கிளப்பிவிடுவார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று கூட நதியா மகளை கிளப்பிவிட்டு தான் பள்ளிக்கு அனுப்பிவிட்டார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று மேலூர் பெரியாஸ்பத்திரியில் வைத்து காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள். மதியம் நேரம் சரியாக நினைவில்லை. 20.12.2021 அன்று அரசு மருத்துவமனை, மேலூாரில் வைத்து காவலர்கள் என்னை விசாரணைசெய்தார்கள். நான் நடந்ததை சொன்னேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு போனில் தகவல் வந்தது அதை வைத்து கூறினேன். நதியாவிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும்இடையே சொத்து பிரச்சினை இருக்கும் விவரம் தெரியுமா

என்றால் தெரியும். யார் எனக்க தொலைபேசியில் தகவ்ல் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. தகவல் வரும் போது நான் என் மகன் சதீஷ்குமாரும் வீட்டில் தான் இருந்தேன். எனக்கு முன்பாக சாட்சியம் அளித்தவர் என் மகன் சதீஷ்குமார் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. என்னை காவலர்கள் விசாரணை செய்துவிட்டு, என் மகனையும் விசாரணை செய்துவிட்டு சென்றுவிட்டார்கள். எனக்கு போனில் தகவல் வந்தவுடன் நேரடியாக நான் அரசு மருத்துவமனை, மேலூருக்கு வந்துவிட்டேனா என்றால் இல்லை, பூதமங்கலத்திற்குசென்று என் மருமகளை பார்த்தேன் அவர் உடம்பு முழுவதும் மாவை பூசி வைத்திருந்தார்கள். அதன்பிறகு ஆம்புலன்ஸ் வந்தது அதில் நதியா, அவருடன் நானும், அவர் அம்மாவும் உடன் சென்றோம். நான் சென்று பார்க்கம் போது நதியா உடம்பு எரிகிறது என்று அலறிக்கொண்டிருந்தார். நதியாவை நான் பார்க்கும் போது, அரை மயக்கத்தில் இருந்தார். போலிசாரிடம் நதியா வாக்குமூலம் கொடுத்தார். அரசு மருத்துவமனை, மேலூருக்கு நாங்கள் சென்ற பிறகு தான் காவலர்கள் அங்கு வந்தார்கள். நாங்கள் சென்றவுடனேயே காவலர்கள் அங்கு வந்துவிட்டார்கள். அரசு மருத்துவமனை, மேலூரில் அரை மணி நேரத்திற்கும் கொஞ்சம் கூடுதலாக அங்கு சிகிச்சை எடுத்தோம். அதன்பிறகு மதுரைக்கு மேல்சிசிக்சைக்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். நாங்கள் அரசு மருத்துவமனை, மேலூரில் இருக்கும் போதே காவலர்கள் விசாரணை செய்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனை, மேலூரில் என் மருமகளை விசாரிக்கும் போது அவர் முழு விபரத்தையும் கூறினார் என்றால் அதை நான் கவனிக்கவில்லை, ஆனால் விசாரணை செய்தார்கள். அதன்பிறகு காவலர்கள் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. வேறு கையெழுத்து எதுவும் என்னிடம் பெற்றார்களா என்றால் நினைவில்லை. நதியாவிடம்

விசாரணை செய்து போலிசார் அதை பதிவு செய்துகொண்டார்கள் என்றால் அதை யார் எழுதினார்கள் என்று நினைவில்லை.

மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2024.12.03 19:07:32 +0530

Assistant Sessions Judge
Melur